சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

அசல் வழக்கு எண். 292 /2023

**PW1 - பாலமுருகன்** **20.04.2026**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் தற்போது எங்கு குடியிருந்து வருகிறேன் என்று கேட்டால் ஆனைமலையில் குடியிருந்து வருகிறேன். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் பேருந்தில் நடத்துநராக பணிபுரிந்து வருகிறேன். நான் KMT என்ற தனியார் பேருந்தில் பொள்ளாச்சி - சேத்துமடை வழித்தடத்தில் செல்லும் பேருந்தில் நான் நடத்துநராக பணியாற்றி வருகிறேன். எனது தந்தை என்ன வேலை செய்து வருகிறார் என்று கேட்டால் கூலி வேலை செய்து வருகிறார். எனது தாயாரும் கூலி வேலை செய்து வருகிறார். நான் என்ன படித்துள்ளேன் என்று கேட்டால் பத்தாம் வகுப்பு படித்துள்ளேன். நான் எந்த வருடத்தில் நடத்துநராக பணியாற்ற உரிமம் பெற்றேன் என்று கேட்டால் 2008ம் வருடத்தில் உரிமம் பெற்றேன். எத்தனை வருடங்களாக நடத்துநராக பணியாற்றி வருகிறேன் என்று கேட்டால் சுமார் 17 வருடங்கள் பணியாற்றி வந்தேன், கடந்த 3 மாதத்திற்கு முன்பு நடத்துநர் பணியில் இருந்து நின்றுவிட்டேன்.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)**

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி